பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 11 2024 **MONDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜார்கண்ட் மாநிலத்தில் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 43 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைகிறது.

2. உச்சநீதிமன்றத்தின் 51-ஆவது தலைமை நீதிபதியாக நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா இன்று பதவியேற்கிறார்.

3. ரஷ்ய துணை பிரதமர் திரு **Dennis Manturov** இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார்.

4. ஹெஸ்புல்லா அமைப்பின் மீது பேஜர் மற்றும் வாக்கி டாக்கிகளை கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்ரேலுக்கு உள்ள தொடர்பை அந்நாட்டின் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார்.

5. ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டி பீகார் மாநிலம் ராஜ்கீரில் இன்று தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<<>>>>>>**

ஜார்கண்ட் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

43 தொகுதிகளில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனால், ஆளும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியும், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் வாக்காளர்களை சந்தித்து இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று பிற்பகல் காணொலி காட்சி வாயிலாக, ஜார்கண்ட் மாநில பிஜேபி வாக்குச்சாவடி முகவர்கள் இடையே உரையாற்றவுள்ளார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா, அம்மாநில முன்னாள் முதலமைச்சர் திரு சம்பை சோரன், ஆகியோரும் இதில் பங்கேற்கிறார்கள்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, சகத்ராபூர் மற்றும் பாங்கி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சாரக்கூட்டங்களில் உரையாற்றவுள்ளார்.

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும், முதலமைச்சருமான திரு ஹேமந்த் சோரன், உசைனா பாத், சாராய் கேலா, உள்ளிட்ட நான்கு இடங்களில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து, பிஜேபி மூத்த தலைவரும், உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சருமான திரு யோகி ஆதித்யநாத், பவநாத்பூர், பலாமு, உசைனாபாத் உள்ளிட்ட இடங்களில் பிரச்சாரங்களில் ஈடுபடுகிறார்.

<<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் பிஜேபி தலைமையிலான மகாயுக்தி கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல் அம்மாநில முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் நேற்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

தானே மற்றும் மும்பையில், திறந்த வாகனத்தில் சென்று சாலைகளின் இருமருங்கிலும் நின்றிருந்த பொதுமக்களிடையே ஆதரவு திரட்டினர்.

<<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் அதிருப்தி வேட்பாளர்கள் ஏழு பேர் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, மகாராஷ்ட்ரா பிரதேச காங்கிரஸ் கமிட்டி, அதிருப்தியாளர்கள் 21 பேர் மீது நடவடிக்கை எடுத்தது.

இதுவரை 28 அதிருப்தி வேட்பாளர்கள் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளருக்கு எதிராக போட்டியிடும் அதிருப்தி வேட்பாளர்கள், உறுப்பினர் பதவியிலிருந்து ஆறு ஆண்டுகள் இடைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ரமேஷ் சென்னிதாலா கூறினார்.

<<<<<<<>>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் ஐந்து சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியின் தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாளை மறுநாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில், ஐந்து தொகுதிகளில் மொத்தம் 34 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

அதிகபட்சமாக **Samaguri** தொகுதியில் 11 பேரும், குறைந்தபட்சமாக **Sidli** தொகுதியில் 3 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

**<<<<<<<>>>>>>**

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா இன்று பதவியேற்கிறார்.

அவருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவி பிரமாணம் செய்துவைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில், குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி டி ஒய் சந்திரசூட் உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

உச்சநீதிமன்றத்தின் 51-ஆவது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கும் நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா, 1983-ஆம் ஆண்டு தில்லி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்துகொண்டார்.

தில்லி மாவட்ட நீதிமன்றத்திலும், பின்னர் உயர்நீதிமன்றத்திலும் பல்வேறு நடுவர் மன்றங்களிலும் வழக்கறிஞராக பணியாற்றினார்.

2005-ஆம் ஆண்டு தில்லி உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்ட சஞ்ஜீவ் கண்ணா, 2019-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு நீக்கம் செல்லும், தேர்தல் பத்திரங்கள் ரத்து உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளை அளித்த உச்சநீதிமன்ற அமர்வில் இடம்பெற்றவர் நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பதவியேற்கும் அவர், ஆறு மாதங்களுக்கு தலைமை நீதிபதியாக இருப்பார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் **Vadtal-**ல் உள்ள ஸ்ரீ சுவாமிநாராயண் ஆலயத்தின் 200-ஆவது ஆண்டு கொண்டாட்டத்தில் இன்று காணொலி மூலம் பங்கேற்று உரையாற்றுகிறார்.

அம்மாநிலத்தில் புகழ் பெற்ற இந்த ஆலயம் பல ஆண்டுகளாக மக்களின் சமூக மற்றும் ஆன்மிக வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<>>>>>>

ரஷ்ய துணை பிரதமர் திரு **Dennis Manturov** இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார்.

அவரது வருகையை வரவேற்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், இன்று மும்பையில் நடைபெறவுள்ள இந்தியா – ரஷ்யா வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் ரஷ்ய துணை பிரதமரை சந்தித்து பேச மிகுந்த ஆவலுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இந்த கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதம் அதிகரித்து வருவது குறித்து காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ரவீந்தர் சர்மா, ஆழ்ந்த வேதனை தெரிவித்துள்ளார்.

ஜம்மு-வில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிஸ்துவார் மாவட்டத்தில் சமீபத்தில் பாதுகாப்புப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் ராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டது கவலையளிப்பதாக தெரிவித்தார்.

கிராம பாதுகாப்புக்குழுவின் இரண்டு பேர் கடத்தப்பட்டு தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் கண்டனத்திற்குரியது என்றும் அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>

கொல்கத்தாவில் ஆர் ஜி கார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், இளநிலை பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணை இன்று முதல் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விசாரணை விரைவாகவும், தினசரி அடிப்படையிலும் நடத்தப்படும்.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் தேதி மருத்துவமனை வளாகத்தில் இளநிலை பெண் மருத்துவரின் உடல் கண்டெடுக்கப்பட்டு, மூன்று மாதங்களுக்கு பிறகு வழக்கு விசாரணை தொடங்க உள்ளது.

முன்னதாக, இந்த வழக்கில் மத்திய புலனாய்வுத்துறையினர் விசாரணை நடத்தி, குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர்.

இதன் அடிப்படையில், சஞ்சய் ராய் என்ற நபர் குற்றவாளி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

**<<<<<<<>>>>>>**

ஹெஸ்புல்லா அமைப்பின் மீது பேஜர் மற்றும் வாக்கி டாக்கிகளை கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்ரேலுக்கு உள்ள தொடர்பை அந்நாட்டின் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசியபோது இதனை தெரிவித்த அவர், பாதுகாப்புத்துறையின் மூத்த அதிகாரிகளின் எதிர்ப்புக்கு இடையே பேஜர் தாக்குதல் மற்றும் ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ருல்லாவை படுகொலை செய்யும் திட்டத்தை நிறைவேற்றியதாக கூறியுள்ளார்.

கடந்த வாரம் பதவி நீக்கம் செய்யப்பட்ட பாதுகாப்புத்துறை அமைச்சர் **'Yoav Gallant'**-யுடன் பல்வேறு விஷயங்களில் தமக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்ததாகவும் திரு நெத்தன்யாகு கூறினார்.

முன்னதாக, இஸ்ரேல், ஹெஸ்புல்லா தலைவர் மீதான தாக்குதலுக்கு வெளிப்படையாக பொறுப்பேற்க மறுத்திருந்தது.

கடந்த செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட பேஜர் மற்றும் வாக்கி டாக்கி தாக்குதலில் 39 பேர் உயிரிழந்தனர்.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டி பீகாரில் உள்ள ராஜ்கீரில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 20-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், நடப்பு சாம்பியன் இந்தியா, ஜப்பான், தென்கொரியா, சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய ஆறு அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு போட்டியில் விளையாட வேண்டும்.

லீக் சுற்று முடிவில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இன்று நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் ஜப்பான் - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் இந்தியா – மலேசியாவை சந்திக்கிறது.

<<<<<<<>>>>>>

சென்னையில் நடைபெறும் கிராண்ட்மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் ஆறாவது சுற்றில் இந்திய வீரர் அரவிந்த் சிதம்பரம், ஈரானின் அர்ஜுன் எரிகேசியை வென்றார்.

இருப்பினும், அர்ஜுன் எரிகேசி நான்கு புள்ளிகளுடன் மற்றொரு வீரரான **Levon**–னுடன், கூட்டாக முன்னிலையில் உள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்கா மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Gqeberha**-வில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு, 124 ரன் எடுத்தது.

125 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா 19 ஓவரில், 7 விக்கெட் இழப்பிற்கு 128 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், நேற்று ஒடிஷா — மோகன் பஹான் அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

<<<<<<<>>>>>>

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று மும்பை அணி 35-33 என்ற புள்ளிக்கணக்கில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஹரியானா 39-23 என்ற புள்ளிக்கணக்கில் குஜராத் அணியை தோற்கடித்தது.

இன்று குஜராத் அணி — பாட்னா அணியையும், மும்பை அணி - ஹரியானா அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<<>>>>>>